கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (மார்ச்/ஏப்ரல் 2015)

01 JUN 2015
EASTERN UNIVERSITY, SRI LANKA

# FAS 3204 Introduction to Indigenous Art Forms

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. பூர்வீகக் குடிகளின் கலைகள் மண்சார்ந்த அல்லது கிராமியக் கலைகளிலிருந்து வேறுபட்டவை.
    (i) பூர்வீகக் குடிகளின் (Indigenous)கலைகளென்று நீர் எவற்றை அடையாளப்படுத்துவீர்?
    (ii) பூர்வீகக் குடிகளின் கலைகளது தனித்துவமான பண்புகளை அல்லது இயல்புகளை விளக்குக.
02. கலை பண்பாட்டை வெளிப்படுத்தும் சாதனமாக மட்டுமன்றி பண்பாட்டை உருவாக்கும் சாதனமாகவும் தொழிற்படுகின்றது.
    (i) பூர்வீகக் குடிகளின் கலைகளுள் சமூக பண்பாட்டு அம்சங்களை வெளிப்படுத்துமாற்றை விளக்குக.
    (ii) மட்டக்களப்பில வேடுவர் சமூகக் கலைகளின் வெளிப்பாடுகள் பற்றி தருக.
03. பூர்வீகக் குடிகளதும் அவர்களது கலைச் செயற்பாடுகள் குறித்தும் வெகுசன ஊடகங்களில் நிகழும் உரையாடல்கள் விவாத்திற்குரியவை கருத்துரைக்க.
04. பூர்வீகக் குடிகளது கலைகளின் அழகியல் வெளிப்பாடு வெகுசன அல்லது பிரசித்த கலைகளின் அழகியல் வெளிப்பாடுகளிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது.
    (i) பூர்வீகக் குடிகளது கலைகளின் அழகியல் வெளிப்பாடுகள் பற்றிக் குறிப்பிடுக.
    (ii) பூர்வீகக் குடிகளது கலை அழகியல் வெளிப்பாடுகள் வெகுசனக் கலைகளின் அழகியல் வெளிப்பாடுகளிலிருந்து வேறுபடுமாற்றை விளக்குக.
    (iii) பிரசித்த கலைகளிலும் பூர்வீகக் குடிகளது கலைகளிலும் கலைஞனின் இடத்தினைக்குறிப்பிடுக.

05. பூர்வீகக் குடிகளின் கலைச்செயற்பாடானது ஆற்றுப்படுத்தலாக அல்லது சிகிச்சை முறைமையாக கையளிக்கப்பட்டு வந்துள்ளது கருத்துரைக்க.

06. பூர்வீகக் குடிகளின் கலைவடிவங்கள், ஆற்றுகை முறைமைகள் குறித்த கற்கை நெறியின் சமகால முக்கியத்துவம் குறித்து கருத்துரைக்க.

*****